# நெதர்லாந்து பிரதமருடன் பிரதமர் மோடி சந்திப்பு

செப்டம்பர் 10, 2023

பிரதமர் திரு நரேந்திர மோடி, 10 செப்டம்பர் 2023 அன்று புது தில்லியில் நடைபெற்ற ஜி20 உச்சிமாநாட்டின் இடையே நெதர்லாந்து பிரதமர் திரு மார்க் ரூட்டவுடன் இருதரப்பு சந்திப்பை நடத்தினார்.

இந்தியாவின் ஜி20 தலைமை மற்றும் உச்சிமாநாட்டின் வெற்றிக்காக பிரதமர் மோடிக்கு பிரதமர் ரூட்டே வாழ்த்து தெரிவித்தார். சந்திரயான் திட்டத்தின் வெற்றிக்காக இந்தியாவுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்த அவர், சூரியனுக்கான ஆதித்யா பயணத்திற்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

வர்த்தகம் மற்றும் முதலீடு, பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு, தூய்மையான எரிசக்தி மற்றும் பசுமை ஹைட்ரஜன், குறைக்கடத்திகள், இணையம் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் போன்றவற்றில் ஒத்துழைப்பு உள்ளிட்ட இருதரப்பு கூட்டுறவை அதிகரிப்பது குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர்.

பரஸ்பர ஆர்வமுள்ள பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகளையும் தலைவர்கள் விவாதித்தனர்.

**புது தில்லி**
**செப்டம்பர் 10, 2023**